**நெடுந்தீவு பிரதேசசபை**
**யாழ்ப்பாண மாவட்டம்**

---

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 இல் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 இல் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தெம்பர் 27 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நெடுந்தீவு பிரதேசசபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) உள்ளூராட்சி சேவை அலுவலர்களுடைய ஓய்வூதியங்களும் இளைப்பாற்று நயங்களுக்குமாக ஓய்வூதியப் பணிப்பாளருக்கு முன்னைய ஆண்டில் செலுத்த வேண்டியுள்ள ரூபா 716,345 இற்கு ஓய்வூதிய ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் திரண்டநிதி கணக்குகளில் கூட்டிக் கணக்கிடப்பட்டுள்ளது.

(ஆ) ரூபா 3,835,000 பெறுமதியான 5 வகையான சொத்துக்கள் கட்டடத்தின் பெறுமதிக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்காமையினால் இறுதிக் கணக்கில் கட்டடத்தின் பெறுமதி குறைத்துக் கணக்கிடப்பட்டுள்ளது.

(இ) முன்னைய ஆண்டுக்கான முத்திரைக் கட்டணம் ரூபா 591,390 நிதிக்கூற்றுக்களில் வெளிக் காட்டப்பட்டிருக்காமையினால் திரண்டநிதி குறைவாகக் காணப்படுகின்றது.

#### 1.3.2 பெறவேண்டியவை

முற்பணங்கள் ரூபா 156,215 நிதியாண்டு இறுதிவரை சீர்செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 ஆவணச் சான்றுகள் இன்மை

தேவையான சான்றுகள், பதிவேடுகள் இல்லாமையின் காரணமாக ரூபா 716,345 பெறுமதியுடைய 01 கொடுக்கல் வாங்கலை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசசபைகள் சட்டம் பிரிவு 24 | சபையின் வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் பட்டியல்கள் அரச வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக விதிகள் | |
| (i) அத்தியாயம் III விதி 32 | சபையினால் ஆதனவரி மதிப்பீட்டுப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் IX விதி 180 | காசு, களஞ்சியம் என்பனவற்றுக்கு பொறுப்பாக உள்ள அலுவலரிடம் பிணைப்பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதி இலக்கம் 1646 | நாளாந்த வாகன ஓட்ட அட்டவணை தொடர்ந்து வரும் மாதத்தின் 15ம் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) பொது நிர்வாக சுற்று நிருபம் | |
| (i) 10 ஒக்டோபர் 1990 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்கம் | சபையின் வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |
| (ii) 11.06.1999ஆம் திகதிய 14/99 ஆம் இலக்கம் | ஊழியர் கடன் பெற்ற கடனாளிகளினால் நேர்மையுடன் செய்யப்படும் பிரகடனம் இணைக்கப்படவில்லை |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2015 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 751,422 விளைந்திருப்பதுடன் ஒப்பிடும்போது இதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானமாக ரூபா 1,020,371 இருந்தமை நிதி விளைவு ரூபா 268,949 குறைவடைந்துள்ளமைக்கு செலவின அதிகரிப்பே காரணமாகும்.

## 2.2 தொழிற்படு மூலதனம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா 3,372,923 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 2,472,690 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா 900,233 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

## 2.3 வருமான முகாமைத்துவம்

### 2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**2015**

| **வருமான விடயம்** | **மதிப்பிடப்பட்டது** | **உள்ளபடியானது** | **டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள்** |
|---|---|---|---|
| | **ரூபா '000'** | **ரூபா '000'** | **ரூபா '000'** |
| வீதவரிகள் | 136 | 88 | 43 |
| குத்தகை வாடகைகள் | 763 | 833 | 68 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 36 | 173 | - |
| ஏனைய வருமானங்கள் | 13,648 | 9,892 | 2,349 |
| மொத்தம் | **14,583** | **10,986** | **2,460** |

### 2.3.2 முத்திரைக்கட்டணங்கள்

காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறவேண்டிய ரூபா 1,695,540 பெறுமதியான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 ஏனைய வருமானங்கள்

குத்தகை, வாடகை சேவைகளுக்கான கட்டணம் ரூபா 647,916 அறவிடப்படாமலுள்ளது

## 3 செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 திண்மக்கழிவு முகாமைத்துவம்

---

சபையின் எல்லைக்குள் திண்மக் கழிவு முகாமைத்துவம் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 5,830 தொடக்கம் ரூபா 2,778,987 வரையான வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

---

உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் திருப்திகரமாக மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம்

---

சபையினால் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.4 சொத்து முகாமைத்துவம்

---

**பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

---

ரூபா 885,000 பெறுமதியான வாராந்த சந்தை சபையினால் பயன்படுத்தப்படாமலுள்ளது.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் பகுதிகளில் விசேட கவனம் செலுத்தப்படவேண்டும்.

(அ) காசோலை கொடுப்பனவுப் பதிவேடு
(ஆ) காசோலைகள், காசுக்கட்டளைகள் பதிவேடு
(இ) காசேடு
(ஈ) முற்பணப் பதிவேடு
(உ) ஊழியர் கடன் பதிவேடு
(ஊ) சில்லறைக் கடன்கொடுத்தோர் பதிவேடு
(உ) விடுமுறைப் பதிவேடு
(எ) கணக்காய்வு ஐயவினாப்பதிவேடு
வாகன சம்பவத் திரட்டுப் புத்தகம்